007

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF COMMERCE (EXTERNAL)
## 2008 / 2009 - HELD IN AUGUST 2009

## COM 26 – INTERNATIONAL ENVIRONTMENT OF BUSINESS

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) உலக உற்பத்தி முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் சர்வதேச பொருளாதாரத்திலும், வர்த்தகத்திலும் எவ்வாறான செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதனை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) "அயல் நாடுகளுக்கிடையில் ஏற்படும் பிராந்திய பொருளாதாரக் கூட்டானது அந்நாடுகளுக்கிடையில் சுதந்திரமான முதலீடுகளையும், வர்த்தகத்தையும் ஏற்படுத்தி பொருளாதாரா நன்மைகளையும் அடைந்து கொள்ளும் ஒரு முயற்சியாகும்." இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? விளக்குக.

(10 புள்ளிகள்)

02. வளங்கள் எல்லாவற்றினையும் பயன்படுத்தி X,Y ஆகிய பொருட்களை உற்பத்தி செய்கின்ற இரு நாடுகளின் வர்த்தக மாதிரி உரு ஒன்றினை உருவாக்குக. பொருளாதாரத்தின் நிரம்பல் பக்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உற்பத்திச் சாத்திய வளைகோடுகள் ஒவ்வொரு நாட்டின் உற்பத்தியிலும் காணப்பட்டுள்ள ஒப்பீட்டு நன்மையினைப் பிரதிபலிக்கின்றன. எனவே, ஒரு நாடு X பொருளின் உற்பத்திக்கு பொருத்தமாகவுள்ள அதேவேளை மற்றைய நாடு Y பொருளின் உற்பத்திக்கு மிகப் பொருத்தமாகவுள்ளது. இவ்விரு நாடுகளுக்குமிடையே வெளிநாட்டு வர்த்தகம் இடம்பெறவில்லையாயின் ஒவ்வொரு நாடும் உள்நாட்டுத் தேவைகளுக்கேற்ப இவ்இரண்டு பொருட்களையும் உற்பத்தி செய்து நுகர்கின்றபோது இவ்இரண்டு பொருட்களினதும் சார்பு விலை வீதங்கள் சமமற்றவையாகக் காணப்படுகின்றன. இவ்இரண்டு பொருட்களுக்குமான நுகர்வோர் தெரிவுகள் ஒரு தொகுப்பு சமபயன் வளைகோடுகளினால் தரப்பட்டுள்ளபோது, இரு நாடுகளிலும் அவை ஒத்தவையாகக் காணப்படுகின்றன எனக் கருதிக்கொள்க. இப்பொழுது இரு நாடுகளுக்கிடையேயும் சர்வதேச வர்த்தகம் திறந்து விடப்படுவதாகவும் தடையற்ற வர்த்தகத்திற்கு தடைகள் ஏதும் இல்லை எனவும் கருதிக்கொள்க. வரைபடத்தினைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை விளக்குக.

(அ) இரு நாடுகளைக் கொண்ட ஒரு வர்த்தக மாதிரியில் தேசிய சந்தைகளின் ஒருங்கிணைப்பானது ஒவ்வொரு நாட்டினதும் சார்பு விலைகள், உற்பத்தி, நுகர்வு என்பவற்றில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) மொத்த ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும்

(04 புள்ளிகள்)

(இ) சர்வதேச பரிமாற்றத்திலான நன்மையும், சர்வதேச சிறப்புத்தேர்ச்சியிலிருந்தான நன்மையும்

(06 புள்ளிகள்)

03. (அ) A என்ற நாடு X பொருளை உற்பத்தி செய்கின்றது. (ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளன) இந்நாடு B நாட்டிலிருந்து Y பொருளை இறக்குமதி செய்வதாகக் கொள்க.

(i) A நாடு B நாட்டுடன் வர்த்தகம் செய்கின்றது. ஆனால் A நாட்டி உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையைக் கருத்திற் கொள்ளாத நிலையில் ஏற்படும் நுகர்வு விளைவை வரைபட ரீதியாகக் காட்டுக.

(02 புள்ளிகள்

(ii) தற்போது A நாட்டின் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையை ஏற்றுக்கொள்வதனால் ஏற்படும் உற்பத்தி விளைவை விளக்குவதுடன், நுகர் விளைவு, உற்பத்தி விளைவு என்பவற்றை ஒரே வரைபிலும் காட்டுக.

(04 புள்ளிகள்

(ஆ) சர்வதேச வர்த்தகம் பற்றிய 'லியோன்டிப் முரண்பாட்டினையும்', 'ஹெக்கர் ஒலி மாதிரியினையும்' விளக்குக.

(06 புள்ளிகள்

(இ) காரணி விலைச் சமப்படுத்தல் தேற்றத்தை விளக்கி, அது எவ்வாறு சர்வதே வர்த்தகத்தின் மூலம் காரணி விலைகளைச் சமப்படுத்துகின்றதென்பதை பொருத்தமா வரைபடங்களை உபயோகித்து விளக்குக.

(08 புள்ளிகள்

04. (அ) "தொழில்நுட்பம் தற்காலிக நன்மையினை அனுபவிக்கும் அதேவேளை புத்துருவாக்கத்திற்கும் வழிவகுக்கின்றது." தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச வர்த்தகக் கோட்பாட்டைப் பயன்படுத்தி மேற்படி கூற்றினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்

(ஆ) சர்வதேச வர்த்தகம் பற்றிய உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட கோட்பாட்டின்ப ஆரம்பத்தில் ஒரு பொருளை எந்த நாடு ஏற்றுமதி செய்கின்றதோ அந்த நாடே இறுதிவரை தேறிய ஏற்றுமதியாளராகவும் இருக்கும்." இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா ஆராய்க.

(10 புள்ளிகள்

05. (அ) தடையற்ற வர்த்தகத்தினால் ஏற்படும் நன்மைகளை விளக்குக.

(10 புள்ளிகள்

(ஆ) உலகமயமாக்கல் என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? வேறுபட்ட வரைவிலக்கணங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்

***